வனைந்தனர்.

பல்வேறு உதவிகளை செய்

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி சார்பில் கணிதப் பயிற்சி பட்டறை



ஈரோடு மார்ச் 15-

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் கணிதத் துறை சார்பில் மத்திய அரசின் உயிர்த் தொழில்நுட்பத்துறை நட்சத்திரக் கல்லூரி திட்டத்தின் மூலம் 'புள்ளியல்; சார்ந்த தரவுப் பகுப்பாய்வு' என்ற தலைப்பில் இரண்டு நாள் கணிதப் பயிற்சி பட்டறை நடைபெற்றது. இந்த பயிற்சியில் கணிதத்துறையைச் சார்ந்த இரண்டாம் ஆண்டு மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். மேலும் இந்த பயிற்சி பட்டறையில் கோயம்புத்தூர் ஆக்கம் தொழில்;துறை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவன தொழில்நுட்ப தலைவர் எஸ். அழகுபாண்டி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார். மேலும் இந்நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை கணிதத்துறைத் தலைவர் முனைவர் எஸ். நாகராஜன் மற்றும் துறைப்பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

# கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் கைபேசியின் மென்பொருள் மேம்பாடு குறித்த பயிற்சி பட்டறை

ARTS AND SCIENCE COLLEGE (AUTONO...
15 MAR 2021
ERODE-638 107



ஈரோடு, மார்ச் 10.

கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மத்திய அரசின் உயிர் தொழில் நுட்பத் துறையின் கீழ் நட்சத்திர அந்தஸ்து பெற்ற இளங்கலை கணினி அறிவியல் துறையின் சார்பாக 08.03.2021(திங்கட்கிழமை) மற்றும் 09.03.2021(செவ்வாய்க்கிழமை) அன்று கைபேசியின் மென்பொருள் மேம்பாடு குறித்த இரண்டு நாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது. இதில் கே ஜீவா மற்றும் எஸ் நந்தகுமார். மூத்த மென்பொருள் பொறியாளர்கள், கோயம்புத்தூர். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இரண்டாம் ஆண்டு மாணவ மாணவியர்களுக்கு கைபேசியின் மென்பொருளை மேம்படுத்துவது குறித்தும், செயலியை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும் தெளிவாக விளக்கிக் கூறினார்கள். மேலும் பன்னாட்டு நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன்கள் அத்திறன்களை வளர்த்துக் கொள்ளுதல் பற்றியும், கைபேசியின் மென்பொருளை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது குறித்தும் மாணவ மாணவியர்களுக்கு செய்து காண்பித்தார்கள் இப்பயிற்சிப் பட்டறை தாளாளர் கே.பழனிச்சாமி தலைமையிலும், முதல்வர் முனைவர் என்.ராமன் முன்னிலையிலும், இளங்கலை கணினி அறிவியல் துறைத் தலைவர் பி. ரமேஷ் மற்றும் பேராசிரியர்கள் மேற்பார்வையிலும் நடைபெற்றது இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இளங்கலை கணினி அறிவியல் துறையின் பேராசிரியர்கள் செய்திருந்தனர் இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள். சுமார் 60 க்கும் மேற்பட்டோர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

பேரவைமாநகர் மாவட்ட அவைத்தலைவர்வெ.பழனிசாமி ஆகியோர் உடனிருந்தனர்.



9/3/2021 – 10/3/2021

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் இயற்பியல் துறை சார்பில் மத்திய அரசின் உயிர் தொழில் நுட்பத்துறை நட்சத்திர கல்லூரி திட்டத்தின் மூலம் திறன்பேசி பழுது நீக்கும் பயிற்சி பட்டறை நடைபெற்றது. இப்பயிற்சியில் இரண்டாம் ஆண்டு இயற்பியல் துறை மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டனர். இப்பயிற்சி 'நியூ டெக்னாலஜி' திறன்பேசி பழுது நீக்கும் நிறுவன பயிற்சியாளர்கள் மூலம் நடத்தப்பட்டது. ஏற்பாடுகளை இயற்பியல் துறை தலைவர் ஆர்.சித்ரா மற்றும் துறைப்பேராசிரியர்கள் செய்திருந்தனர்.



22 FEB 2021

தினத்தந்தி DAILY THANTHI

22.2.2021 (திங்கட்கிழமை)

## கொங்கு கலை அறிவியல் கல்லூரியில்

# திறன் மேம்பாட்டு பயிற்சி



ஈரோடு, பிப்.22-

ஈரோடு நஞ்சனாபுரத்தில் உள்ள கொங்கு கலை அறிவியல் கல்லூரியில், இளங்கலை கணினி அறிவியல் துறை சார்பில் 2 நாட்களாக திறன் மேம்பாட்டு பயிற்சி 'இணையவழியில் சந்தைப்படுத்துதல் -வாய்ப்புகள் மற்றும் சவால்கள்' என்ற தலைப்பில் நடந்தது. இந்த பயிற்சிக்கு கல்லூரி தாளாளர் கே.பழனிச்சாமி தலைமை தாங்கினார். முதல்வர் என்.ராமன் முன்னிலை வகித்தார். கோவையை சேர்ந்த தனியார் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ராஜ்குமார் ராமசாமி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, இணையவழியில் சந்தைப்படுத்துதல் மற்றும் இணையவழியில் உள்ள தொழில் வாய்ப்புகள் குறித்தும் அதில் ஏற்படும் சவால்கள் குறித்தும் விளக்கினார். இதில் இளங்கலை கணினி அறிவியல் துறை தலைவர் ரமேஷ் மற்றும் பேராசிரியர்கள், மாணவ -மாணவிகள் கலந்து கொண்டார்கள்.